செ.வெ.எண்: 910 நாள்: 15/10/10

**செய்தி வெளியீடு – 15.10.2010**

**குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு குடும்ப அட்டை வழங்க தீவிர நடவடிக்கை**

**மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு எ.வ. வேலு அவர்கள் அறிவிப்பு**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் இன்று (**15.10.2010**) காலை **10.30** மணியளவில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றில் பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்தும் அலுவலர்களின் பணிகள் குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களும் பங்கு பெற்றார்கள்.

ஆய்வுக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பாக இன்று உலக உணவு தினம் கொண்டாடப்படுவதை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அனைத்து அரசு துறைகளின் சார்பாக நிறுவப்பட்டுள்ள கண்காட்சியினை துவக்கி வைத்தார்கள். புதிய குடும்ப அட்டைகளை பொதுமக்களுக்கு வழங்கிய பின்னர் ஆய்வுக்கூட்டத்தை துவக்கி வைத்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் வேலூர் மாவட்டத்தில் **2005**ஆம் ஆண்டு புதிய குடும்ப அட்டைகள் வழங்கியபோது, குடும்ப அட்டைகளை குறிப்பிட்ட நியாயவிலைக் கடைகளில் பதிவு செய்ய வேண்டியதற்கு பதிலாக இதர நியாயவிலைக் கடைகளிலும் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வந்துள்ளது. தற்போது நியாயவிலைக் கடை களிலுள்ள குடும்ப அட்டைகளுக்கு ஏற்ப புதிய ‘அ’ பதிவேடு தயார் செய்யப்பட்டு வட்ட வழங்கல் அலுவலர் உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள்.

**2008**ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் போலி குடும்ப அட்டைகளை முற்றிலும் களைவதற்காகவும், குடும்பத்திலுள்ள நபர்களையும், குடும்ப அட்டைகளிலுள்ள விவரங்களை சரிபார்ப்பதற்காகவும் தமிழ்நாடு முழுவதும் வீடுவீடாக சென்று தலத்தணிக்கை செய்யப்பட்டு **2009**ஆம் ஆண்டு மே மாதம் முதல் போலிக் குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்பட்டு வருகின்றன. வீடு வீடாக தலத் தணிக்கைக்கு அலுவலர்கள் சென்ற போது வெளியூர் சென்றவர்கள், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வேலைக்கு சென்று விட்டதால் வீடு பூட்டப்பட்டிருந்தாலும், நீண்ட நாட்களாக பொருள் வாங்காதவர்கள் போன்றவர்களின் குடும்ப அட்டைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அரசுக்குத் தகவல்கள் வரப் பெற்றுள்ளன. இது போன்ற குடும்பங்களின் குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்பட்டிருந்தாலும் மீண்டும் விசாரணை செய்து அத்தகைய குடும்பங்களுக்கு உடனடியாக குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். மேலும், இது வரை குடும்ப அட்டைகள் வாங்காதவர்கள் மனு செய்தால் உடனடியாக விசாரணை செய்து புதிய குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்கள்.

குடும்ப அட்டைகள் விரைவாக வழங்குவதற்காக ஒவ்வொரு வட்டத்திலும் சிறப்பு கவுண்டர்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டத்திலும் சிறப்பு முகாம்களில் உள்ள சிறப்பு கவுண்டர்களில் துணை ஆட்சியர் நிலையில் நியமனம் செய்யப்பட்டுள்ள சிறப்பு அலுவலர்களிடம் 19.10.2010 மற்றும் 20.10.2010 ஆகிய இரண்டு நாட்களில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கப்பட்ட பின்னர் உடனடியாக ஒப்புதல் சான்று வழங்கப்படும். ஒப்புதல் சான்று வழங்கப்பட்ட நாள் முதல் 30 நாட்களுக்குள் தலத் தணிக்கை செய்யப்பட்டு புதிய குடும்ப அட்டை வழங்கப்படும் என தெரிவித்தார்கள்.

விண்ணப்பதாரர்களின் வசதிக்காக வேலூர் வட்டத்தில் டவுன் ஹால், குடியாத்தம் வட்டத்தில் ராதா வில்வம் திருமண மண்டபம், காட்பாடி வட்டத்தில் துளுவ வேளாளர் திருமண மண்டபம், ஆற்காடு வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகம், வாலாஜா வட்டத்தில் இராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், அரக்கோணம் மற்றும் ஆம்பூர் வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலக வளாகம், வாணியம்பாடி வட்டத்தில் அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலக வளாகம் மற்றும் திருப்பத்தூர் வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலக வளாகம் ஆகிய இடங்களில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்படும் என தெரிவித்தார்கள்.

மேலும் இதுவரை குடும்ப அட்டை வாங்காதவர்கள், நரிக்குறவர்கள், அரவாணிகள், குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளில் குடியிருப்பவர்கள், காதல் திருமணம் செய்து கொண்டவர்கள், விவாகரத்து பெற்றவர்கள் ஆகியோர் குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தால் விசாரணை செய்யப்பட்டு குடும்ப அட்டை வழங்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று ஆணையிட்டார்கள். எப்பொருளும் வேண்டாம் என்று குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களுக்கு 7 நாட்களுக்குள் குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டும் எனவும் ஆணையிட்டார்கள்.

ஏழை மற்றும் நடுத்தர மக்களை பொருளாதாரத் தாக்கத்தினால் பாதிக்கப்படாமல் அவர்களின் குடும்பப் பொருளாதாரத்தை உயர்த்தி பெரிதும் பயன்பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தற்போது 10 பொருட்கள் அடங்கிய மானியவிலை மளிகைப் பொருட்களை 25 ரூபாய் விலைக்கு நியாயவிலைக் கடைகளில் வழங்க உத்தரவிடப்பட்டு திட்டம் செவ்வனே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பாக்கெட்டுகள் மண்டலத்தின் அனைத்து கிடங்குகளிலும் தேவையான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அந்தந்த பகுதிகளின் தேவைகளுக்கேற்ப மண்டல இணைப்பதிவாளர்கள் பாக்கெட்டுகளை நகர்வு செய்து அனைத்து மக்களுக்கும் வழங்க வேண்டும் என்றும், அந்தந்த பகுதி வாழ் மக்களின் தேவைகளுக்கேற்ப ஆட்டா மாவு பாக்கெட்டுகளை கிடங்குகளிலிருந்து பெற்று கடைகளில் இருப்பு வைத்து வழங்க வேண்டும் என்றும், 1600 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகளை இரண்டாக பிரிக்கவும், தேவையான இடங்களில் பகுதிநேரக் கடைகளை உடனடியாக துவக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்கள்.

'அ' பதிவேடுகளை உரிய முறையில் பராமரிக்க வட்ட வழங்கல் அலுவலர், கூட்டுறவு சார்பதிவாளர் (பொ.வி.தி) மற்றும் நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் தக்க பயிற்சி அளிக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு மாதமும் ஒதுக்கீட்டு ஆணையை 3ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. ஸ்வரன் சிங், இ.ஆ.ப., உணவுப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குனர் முனைவர் வீர சண்முகமணி, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திருமதி அமுதவல்லி, இ.ஆ.ப., வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. இராஜேந்திரன், இ.ஆ.ப., இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். காந்தி, வேலூர் மாநகர மேயர் திரு. பா. கார்த்திகேயன் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

2/2

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9